*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2026** **02 ஆகஸ்ட் 2026**

# <u>பத்திரிகை செய்தி</u>

பாரதப் பிரதமரின் நாஷா முக்த் பாரத் சங்கல்ப் திட்ட தொடக்க விழா இன்று (02.08.2026) நடைபெற்றது. மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு நரேந்திர மோடி இணைவழியாக திட்டத்தைத் தொடங்கி வைத்து நாடு முழுவதும் உள்ள இளைஞர்களிடையே உரையாற்றினார். அதன் நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சி புதுச்சேரி பல்கலைக்கழக மாநாடு மற்றும் கலாச்சார வளாகத்தில் நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார்.

மாண்புமிகு முதலமைச்சர் திரு ந. ரங்கசாமி, பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் பிரகாஷ் பாபு, தலைமைச் செயலர் டாக்டர் சரத் சவுகான், மை பாரத் திட்ட மாநில துணை இயக்குனர் திரு திரவீன், மை பாரத் தன்னார்வலர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவ மாணவியர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில், போதையில்லா இந்தியாவை உருவாக்குவதற்கான உறுதிமொழியை துணைநிலை ஆளுநர் வாசிக்க அனைவரும் உறுதிமொழி ஏற்றனர்.